### சமூக நீதி – மொழியுரிமை – மாநில உரிமைகள் – சமத்துவம் – மதச்சார்பின்மையை சட்ட ரீதியாக நிலைநாட்டும் வகையில்

# தி.மு.க. சட்டத்துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது!

## கழக சட்டத்துறை மாநாட்டு வாழ்த்துச் செய்தியில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஜன.20–

**தி.மு.க. சட்டத்துறை மாநாட்டிற்கு வாழ்த்துத் தெரிவித்துச் செய்தி அனுப்பிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "சமூக நீதி – மொழியுரிமை – மாநில உரிமைகளை – சமத்துவம் – மதச்சார்பின்மையை சட்ட ரீதியாக நிலைநாட்டும் வகையில் கழக சட்டத்துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது" என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**

துணை முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

அண்ணல் அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பைப் பாதுகாப்பதிலும், சட்டரீதியான போராட்டங்களை நடத்தி பல உரிமைகளை வென்றெடுப்பதிலும், எப்போதும் முன்னணியில் நிற்பது, நம் திராவிட முன்னேற்றக்கழகம்.

இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் நடைபெறக் காரணமே, தந்தை பெரியாரும் திராவிட முன்னேற்றக் கழகமும்தான் என்பது இந்திய வரலாற்றில் நிலைத்துவிட்ட உண்மை.

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, நீதிக்கட்சி அரசால் வழங்கப்பட்ட வகுப்புவாரி உரிமைக்கு, குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தந்தை பெரியாரும் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ்நாட்டில் மிகப்பெரும் போராட்டங்களை நடத்தினர். அதன் தாக்கத்தை உணர்ந்த, பிரதமர் ஜவகர்லால் நேரு தலைமையிலான ஒன்றிய அரசு, `மாநில அளவிலான இட ஒதுக்கீட்டை மாநில அரசுகளே முடிவு செய்துகொள்ளலாம்' என்று முதல் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்தது. அன்றைய சட்ட அமைச்சர் அண்ணல் அம்பேத்கர் `இதர பிற்படுத்தப்பட்டவர்' என்னும் பிரிவை ஏற்படுத்தி, இட ஒதுக்கீட்டை உறுதி செய்தார்.

அன்றிலிருந்து தொடர்ச்சியாகவே தமிழ்நாட்டிலும் அகில இந்திய அளவிலும் சட்டரீதியாகப் பல முக்கியமான செயற்பாடுகளை, நம் கழகமும் சட்டத்துறையும் முன்னெடுத்துள்ளன. 'சட்டம் ஒரு இருட்டறை; வக்கீலின் வாதம் ஒரு விளக்கு' என்றார் பேரறிஞர் அண்ணா. அப்படி பல முக்கியமான வழக்குகளில் ஆணித்தரமான வாதங்களை முன்வைத்து, உரிமைகளை வென்றது, நம் கழக சட்டத்துறை.

**இந்தியாவிற்கே முன்மாதிரியான கழக அரசின் சட்டங்கள்!**

மோடியின் தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க அரசு சமூகநீதிக்கு எதிராக செயல்பட்டபோது, தமிழக மருத்துவக் கல்லூரிப் படிப்புக்கான இடங்களில் மத்தியத் தொகுப்புக்கு வழங்கும் இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு (OBC) முறையாக இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமெனக் கோரி, உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்து வெற்றியும் கண்டோம். இப்படி நாம் நடத்திய எண்ணற்ற சட்டப் போராட்டங்களுக்கு நீண்ட பட்டியல் உண்டு.



அதேபோல் கழக அரசால் கொண்டுவரப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம், பெண்களுக்கான சொத்துரிமை போன்ற பல சட்டங்கள் இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்ந்திருக்கின்றன.

நம் கழக அரசால் கொண்டுவரப்படும் சட்டங்கள், எதிரிகளால் முறியடிக்கப்படாத அளவுக்கு வலிமையானவையாக இருக்கின்றன என்பதற்கு, உள் இட ஒதுக்கீடு தொடர்பாக, சமீபத்தில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பே உதாரணம். ஒடுக்கப்பட்டோரில் ஒடுக்கப்பட்டோரான அருந்ததியர்களுக்கு 2009இல் 3 சதவிகிதம் உள்இடஒதுக்கீடுவழங்கிமுத்தமிழறிஞர் கலைஞர் உத்தரவிட்டார். சமீபத்தில், `உள் இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு' என்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சமூகநீதியை நிலைநாட்டியதுடன் மட்டுமல்லாது, 15 ஆண்டுகளாகத் தொடரும் முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைக்கும் பலம் சேர்த்தது.

இன்று மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க அரசால், அரசியல் சட்டத்துக்கு ஆபத்து வந்துள்ளது. ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோஷலிசம் போன்ற அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சங்களைத் தகர்க்கும் முயற்சியில், மோடி அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதற்கு எதிராக, இந்தியா கூட்டணி அண்ணல் அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தை உயர்த்திப் பிடிக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு தினத்தையொட்டி, அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களில் அரசியல் சட்டத்தின் முகவுரையை வாசிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

**புதிய குற்றவியல் சட்டம் குறித்து – நமது அரசு அமைத்த ஆணையம்!**

கூட்டாட்சித் தத்துவத்தையும் மதச்சார்பின்மையையும் சீர்குலைக்கும் வகையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரும் `பொது சிவில் சட்டம்', `ஒரே நாடு ஒரே தேர்தல்', `வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா' ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்து, நாடாளுமன்றத்தில் போராடி வருகிறோம். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் கொண்டுவரப்பட்ட புதிய குற்றவியல் சட்டங்களை, நம் கழக சட்டத்துறை தொடர்ந்து எதிர்த்து வருகிறது. மத்திய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள, நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் ஓய்வுபெற்ற நீதிபதி சத்யநாராயணன் தலைமையில், ஒரு நபர் கமிட்டி அமைத்து உத்தரவிட்டிருந்தார். இந்தக் குழுவும் புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து, பொதுமக்களிடம் கருத்து கேட்கும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறது.

இந்நிலையில், நம் திராவிட முன்னேற்றக்கழக சட்டத்துறை, மூன்றாவது மாநில மாநாடு நடத்துவதை எண்ணி, மகிழ்ச்சியடைகிறேன்.

அரசியல் சட்டத்தின் மாண்பை உயர்த்திப்பிடிக்கும் வகையிலும், அரசியல் சட்டத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து விவாதிக்கும் வகையிலும், இந்த மாநாட்டின் கருத்தரங்கும் கலந்துரையாடலும் திட்டமிடப்பட்டிருப்பது மிகப்பொருத்தமானது.

சமூகநீதி, மொழியுரிமை, மாநில உரிமைகள், சமத்துவம், மதச்சார்பின்மை ஆகியவற்றை சட்டரீதியாக நிலைநாட்டும் வகையில், நம் கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### சுவிட்சர்லாந்தில் இன்று தொடங்கும்

## உலகப் பொருளாதார மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்கிறார் !

### முதலீட்டாளர்களைச் சந்திக்கவும் திட்டம்!

சென்னை, ஜன.20-

உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டம் இன்று (ஜனவரி 20) முதல் 24ம் தேதி வரை சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ்க்ளோஸ்டர்ஸ் நகரில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் அரசு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில்துறை தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளதால், அவர்களுடன் 50 கூட்டங்களை நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. அந்த வகையில், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய பிராந்திய நாடுகளை சேர்ந்த தொழில் முனைவோர் களை சந்திப்பதுடன், ஐரோப்பியாவில் உள்ள தமிழ் தொழில் முனைவோர்களையும் தமிழக அரசு குழுவினர் சந்திக்க உள்ளனர்.



உலக முதலீட்டாளர்களுடன் உறவுகளை மேம்படுத்துதல், மின்சார வாகனங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் தமிழகத்தின் திறனை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லுதல், வளர்ந்து வரும் உலகளாவிய திறன் மைய துறையில், தகவல் தொழில்நுட்பம் சேவை துறைகளை மேம்படுத்துதல், மெட்டெக், ஹெல்த்கேர், உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய புதிய துறையில் முதலீடுகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்டவை ஆலோசிக்கப்பட உள்ளது.

இந்த ஆலோசனையின் போது, "தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வர வேண்டும் என்று பல்வேறு நாட்டு முதலீட்டாளர்களை சந்தித்து பேசவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திட்டமிட்டுள்ளார். 'நுண்ணறிவு கலத்திற்கான ஒருங்கிணைப்பு' என்ற தலைப்பில் நடைபெற உள்ள அமர்வில் ஒன்றிய அரசு மற்றும் மாநிலங்களின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்ட குழுவுடன் தமிழ்நாடு அரசு குழுவும் கலந்து கொள்கிறது. இந்த குழுவில் ஆந்திரம், மராட்டியம், தெலங்கானா, தமிழ்நாடு, உத்தர பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய 6 இந்திய மாநிலங்களின் உயர்மட்ட பிரதிநிதிகள் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

**வளர்ச்சியில் முன்னேறி பாயும் தமிழ்நாடு**

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறும் போது, "டாவோஸ் மாநாட்டில் 'வளர்ச்சியில் முன்னேறி பாயும் தமிழ்நாடு' என்ற முழக்கத்துடன் முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டுள்ளோம். மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த நிறுவனங்களுடன் தமிழ்நாட்டு அதிகாரிகள் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சிறப்பாக தொழில் செய்து வரும் நிறுவனங்கள், தொழில்துறை தலைவர்களையும் முன்னிறுத்தி முதலீடுகளை ஈர்க்க முயற்சி செய்கிறோம். தமிழ்நாட்டின் சாதன அம்சங்களை உலகப் பொருளாதார மாநாட்டில் முன்னிறுத்தி முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

---

### நீடாமங்கலம்:

## வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம்!

திருவாரூர்,ஜன.20-

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நீடமங்கலம் ஒன்றியப்பகுதிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களின் கூட்டம் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் , தொழில்முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா , மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் ஆலோசனைகளின்படி நடைபெற்றது.

சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ராஜா சீனிவாசன் பங்கேற்கும் இந்த கூட்டங்களில் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஒன்றிய செயலாளர்கள் நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், நகர செயலாளர் ஆர் .ராஜசேகர், முன்னாள் ஒன்றிய தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், நகர்மன்ற தலைவர் ராமராஜ், பொதுக்குழு உறுப்பினர் கமால், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பி.ஜி.ஆர். ராஜாராமன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டங்களில் தலைமைக்கழக அறுவுறுத்தலின்படி கேட்கப்படும் தகவல்களை பெறுதல், வீடுகள் தோறும் வாக்களர்களை சந்தித்து திண்ணை பிரச்சாரம் செய்தல், கழக ஆட்சியின் பொற்கால திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்த்தல் , வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200+ என்கிற கழக கூட்டணியின் இலக்கை அடைய அயராது தேர்தல் பணி ஆற்றுதல் உள்ளிட்டவைகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.



நாகை மாவட்டம், நாகூர் நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நாகூரில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் சிறப்புரை யாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் சைதைசாதிக், இளம் பேச்சாளர் அகிலா, நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரெத்தினம் மற்றும் பலர் உள்ளனர்.

---

## உத்தமபாளையம் வட்டமலைக்கரை நீர்த்தேக்க அணை!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஜன.20-

திருப்பூர் மாவட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால்வாய் சரகம் 86.900 கி.மீ இல் உள்ள கள்ளிபாளையம் மதகில் காங்கயம் நீர் வெளிப்போக்கி வழியாக திருப்பூர் வட்டம், உத்தமபாளையம் கிராமத்திலுள்ள வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக் கத்திற்கு 08.01.2025 முதல் 18.01.2025 வரை 10 நாட்களில் 240 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீரிழப்பு உட்பட) பொது மக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காக, அணையின் நீரிருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து, தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வட்டமலைக்கரை அணைக்கு, கடந்த 8ம் தேதி கள்ளிபாளையம் மதகில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், வட்டமலைக்கரை அணைக்கு தண்ணீர் வந்தது. வட்டமலை ஓடை வழியோர கிராம மக்கள் நீர்வழிப் பாதை அருகே பொங்கல் வைத்து, தண்ணீரில் மலர்கள் தூவி வணங்கி வரவேற்றனர். இந்த தண்ணீர் திறப்பால் 23 இடங்களில் கட்டப்பட்ட தடுப்பணைகள் நிரம்பியுள்ளன. இதன் காரணமாக வட்டமலை ஓடை யின் இரு கரைகளிலும், 50 கி.மீ., துாரம் வரை, 58க்கும்மேற்பட்ட வழியோர கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரும், விவசா யத்துக்கு நீர் ஆதாரம் மேம்படும். அணைக்கு நீர் வருவதை அறிந்த கிராம மக்கள் பொங்கல் வைத்து தண்ணிரை வழிபட்டனர். அணையில் நீர் நுழைவு பகுதியில் பொதுமக்கள், விவசாயிகளும் பொங்கல் வைத்து, மலர் தூவி வரவேற்றனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு. பெ.சாமிநாதன் வடசின்னாரிபாளையம், உத்தமபாளையம் வட்டமலைக்கரை ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் பின்னர் நீர்வரத்தினை மலர்கள் தூவி வரவேற்றார்.

இந்த ஆய்வின் போது திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், உதவி பொறியாளர் கோகுல் வட்டாட்சியர் மோகனன், வெள்ளக்கோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் ஜப்பார்
### சனவரி 20 (2020)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**